# முதலாவது அனைத்துலக
# சிலப்பதிகார மாநாடு

## சிட்னி, ஆஸ்திரேலியா

**2019**
**செப்டம்பர்**
**27, 28, 29**






இடம் :
**தமிழர் மண்டபம்**
**தமிழ் இலக்கிய கலை மன்றம்**
21, Rose Crescent,
Regents Park, NSW 2143
Australia

# சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் சுட்டும் இசைச்செய்திகள்

சி. சூரியகுமார்,
முதுநிலை விரிவுரையாளர், இசைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.

ஆய்வுத் தலைப்பு.

## சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் சுட்டும் இசைச்செய்திகள்.

முன்னுரை.

"சேரன் தம்பி சிலம்பிசைத்தான்" என்பதற்கிணங்க சேர மன்னனாகிய செங்குட்டுவனின் தம்பியாகிய இளங்கோவடிகளால் எழுதப்பட்ட சிலப்பதிகாரம் தமிழின் முதல் காப்பிய நூலாகும். இந்நூல் சோழநாட்டில் தோன்றி பாண்டியநாட்டிற்கு சென்று அல்லல்பட்டு சேரநாட்டில் தெய்வநிலை அடையும் கண்ணகி என்ற அறியாச்சிறுமி மதுரையை எரித்து தெய்வநிலை பெறும் கதையைக் கூறுவதாகும். இது தமிழிலக்கியத்தில் மாத்திரமின்றி உலக இலக்கிய வரலாற்றிலேயே மிக அரிதானதொரு உதாரணமாக விளங்குகின்றமை குறிப்பிடதக்கது. இந்நூலில் மூவேந்தர்களுடைய ஒற்றுமை நாடும் விருப்பம் காணப்பட்ட போதும் சேரமன்னன் செங்குட்டவன் சிறப்பானவனாக புகழப்படுவதை காணலாம். இயல், இசை மற்றும் நாடகம் ஆகிய முத்தமிழ்களையும் தன்னகத்தே கொண்டுள்ள சிலப்பதிகாரத்திற்கு பல உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ள போதிலும் அவற்றுள் அடியார்க்கு நல்லார் உரை மிகவும் சிறப்பு வாய்ந்ததென்பது பொதுவான கருத்தாகும். அந்தவகையில் சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் ஏழுதிய உரையின் அடிப்படையில் பாக்கின்ற போது இன்று தென்னிந்தியா மாத்திரமன்றி உலகம் முழுமைக்கும் வழக்கிலுள்ள கர்நாடக இசையில் பயன்படுத்தப்படும் இசைச் சொற்களுக்கும், இசை பயன்பாட்டு முறைக்கும் அடிப்படையாக அமைந்தது இதுவே எனலாம். அந்த வகையில் இதில் கூறப்பட்ட இசைச் செய்திகளை வெளிக்கொணர்வதை நோக்கமாகக் கொண்டு வரலாற்று மற்றும் விவரண ஆய்வு முறையில் இது அமைந்துள்ளது.

சிலப்பதிகாரம்.

1.1. சிலம்பு என்னும் அணிகலனை அடிப்படையாகக் கொண்டு அதிகாரமாக உருவான காவியம் என்பதால் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றுள்ளது. சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் புகார்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக் காண்டம் என மூன்று பெரும் காண்டங்களாக பிரித்து ஒவ்வொரு காண்டங்களையும் காதைகளாக பிரித்து கோவலன், கண்ணகி, மாதவி ஆகியோரை மையமாக வைத்துக் காப்பியமாக படைத்துள்ளார். (துரைசாமிப்பிள்ளை.ஔவை.சு - சிலப்பதிகாரச் சுருக்கம்-ப.எ-15)

## உரைநடையும், ஆசிரியர்களும்

பொதுவாக உரைநடை தவிர்ந்த அனைத்து நூல்களுக்கும் உரைநடை மிக அவசியமானதொன்றாகும். ஏனெனில் தற்காலத்தில் பாடல்கள், கவிதைகள், கதைகள், காவிங்கள் அனைத்தும் இன்றைய உரைநடைப் போக்கிலேயே படைக்கப்படுவதனைக் காணலாம். எனினும் ஆரம்பகாலங்களான மன்னராட்சி காலங்களிலே எழுந்த இலக்கியங்கள் அனைத்துமே சொற்சுவையும், பொருட்சுவையும் மிகுந்ததாகவும் யாப்பிலக்கண முறைக்கு உட்பட்டதாயுமே படைக்ககப்பட்டன. குறிப்பாக சங்ககால, சங்கமருவிய காலங்களில் எழுந்த சிற்றிலக்கியங்களும் சரி, பேரிலக்கியங்களும் சரி இலக்கிய நயத்துடனேயே படைக்கப்பட்டிருப்பதை காணமுடிகிறது.

அந்தவகையில் இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்திற்கு அரும்பதவுரையாசிரியர், அடியார்க்குநல்லார், உ.வே.சாமிநாதஜயர், வேங்கடகிரிநாட்டார், எஸ். இராமநாதன் போன்ற பலரும் உரைகள் எழுதியிருப்பினும் அதில் ஈருரை ஆசிரியர்கள் என சிறப்பிக்கப்படுவது அரும்பதவுரைகாரரும், அடியார்க்கு நல்லாருமே ஆவார். எனினும் அவர்களிருவருள் சிறப்பானதும் நுண்மையானதுமானது அடியார்க்கு நல்லாரின் உரையே என்பதில் சந்தேகம் இல்லை. அடியார்க்கு நல்லார் அநேகமானவிடங்களில் அரும்பதவுரைகாரரை அனுசரித்தே தன் உரையை எழுதியிருப்பது புலனாகின்ற போதும் இவர் இன்னும் பல இடங்களில் அரும்பதவுரையாசிரியரின் கருத்தை மறுத்தும் தன் கருத்தை வலியுறுத்தியுள்ளார். இவர் உரையின் வாயிலாக இவரது இலக்கிய, இலக்கண சமய, இசை, நடன, நாட்டியப் புலமை புலனாகின்றது. (சுப்பிரமணியன்ச.வே,மெய்யப்பன்,ச-சிலப்பதிகாரம் பண்பாட்டுச்சுரங்கம்-ப.எ198)

## இசைச் செய்திகள்.

சிலப்பதிகார உரையிலே அடியார்க்கு நல்லார் இசை தொடாபான பல செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். ஏழிசை, ஏழிசைப்பிறப்பு, பண்கள், பாலைகள், பாலைத்திரிபு முறைகள், இசைக்கருவிகளான யாழ், குழல், முழவு மற்றும் பிற கருவிகள், இசைக்கு அடிப்படையான தாளங்கள், பாடல்வகைகள், குரலிசை மற்றும் தண்ணுமையாளனின் இலக்கணங்கள் போன்ற இன்னோரன்ன செய்திகள் குறிப்பிடபட்டுள்ளது.

## ஏழிசைக் குறிப்புக்கள்

அடியார்க்கு நல்லார் தனது சிலப்பதிகார உரையிலே பல இசைக்குறிப்புக்களை குறிப்பிட்டு விளக்குகின்றார். அந்த வகையிலே தனது உரையிலே ஏழிசை பற்றிய செய்திகளை பல இடங்களிலும் தெளிவுபடுத்தியுள்ளார். இதனை,

"சரிக மபதநியென் றேழெழுத்தால் தானம்

வரிபரந்த கண்ணினாய் வைத்துத் - தெரிவரிய.....

என்ற சூத்திரத்தை மேற்கோள்காட்டி ஏழிசை பற்றி விளக்குகின்றார். அதாவது 'குரல் முதல் ஏழு எனும் ஏழிசைகளுக்கு சரிகமபதநி என்றமையானும், சட்சம் முதலிய ஏழின் முதல் எழுத்துக்களாக இவை நிற்பவையாதலாலும் குரல் எனும் சுரம் "ச"என்று எழுதப்பெறும் என்பதும் அது சட்சம் ஆகும்' என்பதையும் தன் உரையினூடாக தெளிவுபடுத்தியுள்ளார். (இராமநாதன்.எஸ்-சிலப்பதிகாரத்து இசைத்தமிழ் -ப.எ.17)

இன்று இந்திய இசையில் "ஸரிகமபதநி" எனும் குறியீட்டு எழுத்துக்கள் ஏழு சுரங்களுக்கு வழங்கி வருகின்றன. இதனையே பண்டைய தமிழிசையிலும் இருந்தது என குறிப்பிட்டுள்ளார். ஸட்ஜம் என்பது வடசொல் எனவும் இது ஆறிலிருந்து பிறப்பது என பொருள்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். விரைவில் பாடுவதற்காக "ஷட்ஜம்" என இன்று வழங்கும் "ஷ"என்பது பண்டைய இசையில் "ச" என ஒலிக்கப்பட்டதென்பது அடியார்க்கு நல்லாரின் உரையினூடாகத் தெளிவாகின்றது. அத்தோடு "ச" எனும் சுரம் தவிர பிற சில சுரங்களும் தமிழ் ஒலிப்பு பெறுகின்றன. வடதமிழகத்தில் "சரிகமபதநி" எனும் வடசொல் குறியீடுகள் 6ம் நூற்றாண்டில் வழக்கிற்கு வந்தன என்றும், பின்னர் சேந்தன் திவாகர நிகண்டு காலம் தொட்டு அடியார்க்கு நல்லார் காலத்திற்குள் (11ம் நூற்றாண்டு) தமிழகம் எங்கும் பரவின என்பதும் தெளிவாகிறது. (சுந்தரம்-வீ.ப.க-தமிழிசைக்கலைக்களஞ்சியம் -தொகுதி-3-ப.எ.181)

இசையிலே 'சரிகமபதநி' என்ற எழுத்துக்கள் எழுதுவதற்கும் பாடுவதற்கும் பயன் படுத்தப்பட்டன. சரிகமபதநி என்று சுரமாகவே பாடும் முறை எப்போது தோன்றிற்று என அறுதியிட்டு கூற இயலவில்லையென குறிப்பிடுகின்றார். அத்தோடு இந்த "சரிகமபதநி" என்ற ஏழிசை குறியீட்டிற்கும் தமிழ்ப்பெயரே அதிகளவு பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிட்டிருக்கிறார். அவையாவன-

| தமிழ்பெயர் | வடமொழிப்பெயர் | குறியீடு |
|---|---|---|
| குரல் | ஷட்ஜம் | ச |
| துத்தம் | ரிஷபம் | ரி |
| கைக்கிளை | காந்தாரம் | க |
| உழை | மத்திமம் | ம |
| இளி | பஞ்சமம் | ப |
| விளரி | தைவதம் | த |
| தாரம் | நிஷாதம் | நி |

### ஏழிசையின் பிறப்பு

இசை இலக்கணத்தை தெளிவாக விளக்கும் அரிய சூத்திரமாக திகழ்கின்றது என்கிறார். இது குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற சுரங்கள் முறையே சட்சமம், இடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் என்றும் ச,ரி,க,ம,ப,த,நி என்றும் பெயர் பெற்றன என்பதை தாண்டி இவ்வேழிசையும் எவ்வாறு பிறக்கின்றன என்பதை அறியவேண்டும் என்றார். இவ்வேழிசை முறைமையையும் வண்ணப்பட்டடையாக சுரங்கள் பிறக்கும் முறையையும் யாழ் கருவியை அடிப்படையாக கொண்டு 04 வகையான யாழிலும் இப்பண்ணின் சுரங்கள் பிறக்கும் தன்மையையும் சுரங்கள் பிறக்கும் இடங்களையும் ஏழிசையின் இயற்கை ஒலிகளையும் தெளிவாக விளக்கியுள்ளார். (செயலட்சுமி.சேலம்.எஸ்-சிலப்பதிகாரத்தில் இசைச்செல்வங்கள் - ப.எ.85) மேலும் ஏழிசையும் இயற்கை ஒலிகளும், ஏழிசைப் பெயர்களின் மாத்திரைகள், ஏழிசையும் இராசி வட்டமும், பாலைகளும் அதன் வகைகளும், செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை அகிய ஏழ்ப்பெரும் பாலைகள் போன்ற பல செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பாலைகளின் அடிப்படையிலேயே ஏனைய பண், பண்ணியற்திறம், திறம், திறத்திறம் என்பன பிறப்பது கவனிக்கத்தக்கது.

### தாளகள்

இசையிலே பெரும் பங்கினை வகித்தது எனலாம். குதித்தாடும் பாதம் தரையில் பட்டுப்பட்டு ஓசை எழுவதினின்றும் "தாளம்" எனும் சொல் உருவாகியது என சிலப்பதிகார உரையாசிரியர் குறிப்பிடுகின்றார். தாளம் என்பது காலக்கணக்கினை அடிப்படையாக கொண்டது. இசையியல்கள் அனைத்திற்கும் தாளம் "எலும்புச் சட்டகம்" எனவும் இசை நரம்பொலிகள் "தசையும் நரம்பும்" எனவும் கூறலாம். பாடலில் தாளம் என்பதே அடிப்படை. இசையில் மாத்திரமின்றி தாளமானது நாட்டியத்திலும் பிரதான பங்கை வகிப்பதாக அடியார்க்கு நல்லாரின் உரை கூறுகிறது.

இசை அரங்கில் அனைத்துக் கருவிகளையும் பாடுவோரையும், ஒன்றித்துச்செல்வது தாளமாகும். பாடல்களுக்கு வடிவமும், நடையும், விரைவெழுச்சியும் நல்குவது தாளமே. இரக்கம், அருள் முதலிய உணர்ச்சிகளையும் வீரம், கோபம் முதலிய துள்ளல் உணர்ச்சிகளையும் தூண்டி எழச்செய்வது தாளத்தில் உள்ள கதியும் நடையும் ஆகும். இசையின் கணிதம் தாளமே என்பது துளியும் ஐயமில்லை. எனவே தான் இளங்கோவடிகள் தன் சிலப்பிலும் இசைக்கும், நடனத்திற்கும் தாளம் பிரதானமானதாக உள்ளது என்பதை தன் சிலப்பதிகார பாடல்கள் மூலம் வலியுறுத்தியுள்ளதாக தன் உரையில் எடுத்துக்கூறுகின்றார். (தண்டபாணி.ப-திராவிடர் இசை-ப.எ.38-39)

**இசைக்கருவிகள்**

சிலம்பிற்கு ஏழுதிய தன் உரையை அடியார்க்கு நல்லார் இசைநுட்பம் ததும்பும் வகையில் படைத்துள்ளார். அந்த வகையில் அவர் தன் உரையிலே பல இசைசெய்திகளை எடுத்து விளக்கியிருப்பதை காணமுடிகிறது. அந்த வகையில் இவர் தன் உரையிலே பல்வகைப்பட்ட கருவி இசைகளையும், அவ் இசைக்கருவிகளை வாசிக்கும் இசையாசிரியர்களையும், இசைக்கருவிகளையும் சிறப்புற விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் இவரது உரை நூலிலே யாழ், குழல், முழவு, தண்ணுமை, சல்லிகை என பல இக்கருவிகளையும், யாழாசிரியன், தண்ணுமையாசிரியன், குழலாசிரியன், இசையாசிரியன் என இக்கருவிகளை கையாளும் விற்பன்னர்களையும் விளக்கி நிற்கிறார். (சுப்பிரமணியன்.ச.வே- சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதை- ப.எ.93-96)

உரையில் கையாளப்பட்ட இவ்வகை இசைக்கருவிகளின் சிறப்பையும், வாசிக்கும் முறையையும், அமைப்பையும் இவர் எடுத்துக்கூறியுள்ளமை புலனாகிறது அதுமட்டுமல்லாது யாழாசிரியன், குழலாசிரியன், தண்ணுமையாசிரியனுக்கு இருக்கவேண்டிய தகைமையை இளங்கோவின் பாடலடிகள் மூலம் தெளிவுபடுத்தியிருப்பதை காணமுடிகிறது. “யாழும் குழலும் சீரும் மிடறும் தாழ்குரல் தண்ணுமை ஆடலொடு இவற்றின் இசைந்த பாடல்...” என்ற இளங்கோவின் வரிகளுக்கு அடியார்க்கு நல்லாரின் விளக்கம் சிறப்பானதாய் காணப்படுகிறது. அதாவது யாழ்ப்பாடலும், வங்கியப்பாடலும் இருவகை தாளக்கூறுபாடுகளும், மிடற்றுப்பபாடலும் மந்தமாகிய சுரத்தினையுடைய அதாவது தாழ்ந்த ஒலியுடைய தண்ணுமையும், அகக்கூத்து புறக்கூத்துக்களுடன் பதினொரு ஆடல் வகையும் வல்லவனாயும் இசை உருக்களைச் சேர்த்து இசை கொள்ளும்படியும் இருவகைப்பட்ட பாடல்களுக்கும் பொருளான இயக்கம் நான்கினையும் அமைத்து தேசாந்திரங்களில் பாடைகளையும் அறிந்து அப்பாடைகள் இசை பூணும் வகையும் அறிந்தவனாய் இசையாசிரியன் இருக்க வேண்டும் என இளங்கோவடிகளின் பாடங்களின் மூலம் அடியாக்குநல்லார் விளக்கியுள்ளார். அதுமட்டுமன்றி ஒவ்வொரு இசைக்கருவிகளையும் தனித்தனியே விளக்கி இருப்பது கவனிக்கத்தக்கது.

**முடிவுரை.**

தமிழிசையின் பொக்கிசமாக விளங்குகின்ற சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையிலிருந்து அது இசை தொடர்பான அரிய பல செய்திகளை தன்னகத்தே கொண்டுள்ளதை மேலே குறிப்பிட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் ஓரளவு அறிந்து கொள்ள முடிகின்றது. அதில் கூறப்பட்டுள்ள அனைத்தும் தமிழிசையின் தொன்மை, தமிழிசையின் சிறப்பு என்பனவற்றினை எடுத்தியம்புவதாய் அமைவதனால் இதன் மூலம் தமிழிசையின் மேன்மையினை உணரலாம்.